**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.**

திரு.D.பொன்வேந்தன்,B.Tech,M.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| பெயர் | - | திரு. டி.சி. மோகன் | EP.No. | 3/2024 |
|---|---|---|---|---|
| த/பெ. | - | | ம.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

23.06.2025.

3 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1. மனு சொத்தானது தற்போது என்னுடைய பெயரில் உள்ளதா என்றால் இல்லை, அதை என்னுடைய உறவினரான திரேசா மஞ்சு என்பவருக்கு கொடையாக (Gift) கொடுத்துள்ளேன், பட்டா தற்போது வரை என் பெயரில்தான் உள்ளது. மனு சொத்தின் பட்டாவானது என் பெயரில்தான் உள்ளது என்று மனுவில் குறிப்பிடவில்லை என்றால், முதல் விசாரணையில் மட்டும் சொல்லியுள்ளேன்.

2. மனு சொத்தை இடித்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக புகைக்படம் மற்றும் பென்ட்ரைவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். **ம.சா.ஆ.1** ஆன முதல் தகவல் அறிக்கையில் 2 ம் எதிர்மனுதாரர் மனு சொத்தை இடித்துள்ளார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் பின்னிட்டு கொடுத்த வாக்குமூலத்தில 2 ம் எதிர்மனுதாரின் பெயரை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். நான் பின்னிட்டு கொடுத்த வாக்குமூலத்தை பற்றி நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அவசியம் இல்லை என்பதால் குறிப்பிடவில்லை.

3. அசல் வழக்கு எண்.72/2008 ல் எனக்கு எதிராக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். இம்மனுவின் 2 முதல் 8 எதிர்மனுதார்கள் அ.வ.எண்.72/2008 ல் தரப்பினராக இல்லை என்றால் அன்றைய தேதியில் பஞ்சாயத்து தலைவராக இருந்தவர் தரப்பினராக சேர்க்கப்பட்டிருந்தார். 2ம் எதிர்மனுதாரர் 2008ம் ஆண்டு காலத்தில் பஞ்சாயத்து தலைவராக இல்லை என்றால் சரிதான். இம்மனு சொத்து விபரத்தில் காலி மனை என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றும் வீடு இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான், மனுவில் குறிப்பிட்டுள்ளேன்.

4. என்னுடைய முதல் விசாரணையில் 2ம் எதிர்மனுதாரருக்கு பணம் பரிப்பதுதான் வேலை என்று சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தமாக காவல் நிலையத்திலோ, நீதிமன்றத்திலோ புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் கலைவனார் நகர் மக்கள் சங்கதின் செயலாளராக இருந்தபோது மனு சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டு அப்போதைய ஊராட்சி மன்ற தலைவரிடம் மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான், ஆனால் அது சரியான சொத்து இல்லை என்று சொல்லி ஊராட்சி மன்ற தலைவர் நிராகரித்து விட்டார்.

5. மனு சொத்தின் வில்லங்க சான்றிதழில் என்னுடைய பெயர் இல்லை என்றால் சரிதான். மனு சொத்தில் உள்ள பஞ்சாயத்து இடத்தில் போர் அமைப்பது எனக்கு இடையூராக உள்ளதால் நான் பொய்யாக இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over th the witness are admitted by him/her to be correct.

District Munsif
Vanur.